செ.வெ.எண்:16 நாள்:06.07.2021

கோயம்புத்தூர் மாவட்டம்

## மாவட்ட வனக்குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று(06.07.2021) மாவட்ட வனக்குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், பொள்ளாச்சி சார் ஆட்சியர் திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ் இ.ஆ.ப., மாவட்ட வன அலுவலர் திரு.வெங்கடேஷன் இ.வ.ப, ஆனைமலைபுலிகள் காப்பக துணை இயக்குநர் திரு.ஆரோக்கியராஜ்சேவியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி.கவிதா, மாவட்ட ஆதிதிரவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் திரு.ராம்குமார், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.செந்திலரசன், திரு.ரவிச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தாவது,**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரும் வகையில் மாவட்ட வனக்குழு செயல்பட்டு வருகிறது.

மாவட்ட வனக்குழு கூட்டம், மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடைபெறும். மேலும், பழங்குடியினரின், வீட்டுமனைப்பட்டா, குடிநீர், சாலை வசதி, புதிய குடும்ப அட்டை, சாதி சான்றிதழ்கள், போன்ற கோரிக்கைகள் குறித்து, இக்கூட்டத்தில் தெரிவித்து, கோரிக்கை மனுக்களை மாவட்ட நிர்வாகத்திடம் வழங்கலாம். கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட

அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, நெல்லித்துறை, ஓடந்துறை கிராமங்களை சேர்ந்த 30 பழங்குடியின மக்களுக்கு சாதி சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்**